**செய்தி வெளியீடு எண்: 381** **நாள் : 05.08.2015**

**பத்திரிக்கைசெய்தி**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணையின்படி, **மாண்புமிகு உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள்** தலைமையில், இன்று **(05.08.2015)** இந்து சமய அறநிலையத் துறை செயல்பாடுகள் குறித்து, மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டம், சென்னை ஆணையர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழக வரலாறு, கலை மற்றும் கலாச்சாரத்தை எடுத்துக்கூறும் கருவூலங்களாகத் திகழும் திருக்கோயில்களுக்கு, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருப்பணி செய்து குடமுழுக்கு செய்யப்பட வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, **இதுவரை 7,845 திருக்கோயில்கள் ரூ.309.02ஸ கோடி மதிப்பீட்டில் குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளன.** இத்துடன், பழமையான திருக்கோயில்களை பழமையும் தொன்மையும் மாறாவண்ணம் புதுப்பிக்க, கடந்த நான்காண்டுகளில் ரூ.90 கோடி ஒதுக்கீடு செய்து புனரமைப்பு பணிகள் நிறைவுற்றுள்ளன. மேலும், 2016ம் ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் நடைபெறவுள்ள கும்பகோணம் மகா மகப் பெருவிழாவினை முன்னிட்டு 69 திருக்கோயில்களுக்கு ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயில்களின் திருப்பணிகளை விரைந்து முடித்து, 6 மாதத்திற்குள் மகாமகப்பெருவிழா சிறப்புடன் நடைபெற அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** தேரோட்ட விழாக்கள் சிறப்புற நடைபெற 137 திருத்தேர்கள் ரூ.22.70 கோடி செலவில் புதிதாக செய்யப்பட்டு தேரோட்டம் நடைபெற்றது. திருக்கோயில்களுக்கு சொந்தமான திருக்குளங்கள் திருக்கோயில்களின் பயன்பாட்டிற்கு மட்டுமல்லாமல், பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு நீர்நிலை ஆதாரங்களாகவும் பயன்படுவதால் திருக்குளங்களை சீரமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதுவரை ரூ.3.30 கோடி செலவில் 611 திருக்குளங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

மிகவும் பிரசித்தி பெற்ற பிரார்த்தனை தலமாக விளங்கும் சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு பக்தர்களின் வேண்டிகோளினை ஏற்று ரூ3.15 கோடி மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜகோபுரம் புதியதாக கட்ட **மாண்புமிகு அம்மா** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். பக்தர்கள் அனைவருக்கும் மலையேற்றம் சாத்தியமாகும் வகையில், சோளிங்கர் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலுக்கு ரூ9.30 கோடி மதிப்பீட்டிலும், குளித்தலை அய்யர் மலை இரத்தினகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ6.70 கோடி மதிப்பீட்டிலும் கம்பி வட ஊர்தி அமைக்கப்பட உள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், **மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலம் இந்து சமய அறநிலையத்துறையின் பொற்காலம்** என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணையின்படி, மானசரோவர் மற்றும் முக்திநாத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்ட 376 பக்தர்களுக்கு ரூ 144.10 லட்சம் அரசு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி,** ஆடி மாதத்தில் வரும் ஆடி கிருத்திகை, ஆடி அமாவாசை போன்ற விசேஷ காலங்களில் பக்தர்களின் வசதிக்காக அனைத்து திருக்கோயில்களிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கழிவறை மற்றும் குளியல்அறை, பாதுகாப்பு போன்ற அடிப்படை வசதிகள் செய்து, பக்தர்கள் பயன் பெறும் வகையில் திருக்கோயில் அலுவலர்கள் செயலாற்றிட வேண்டுமெனவும் மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி**, தமிழகத்தில் சிதிலமடைந்த கோயில்களே இல்லை என்ற நிலையை உருவாக்குவதுதான் இந்து சமய அறநிலையத்துறையின் தலையாய நோக்கமாகக் கொண்டு அலுவலர்கள் ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்ற வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், இந்து சமய அறநிலையத்துறை **கூடுதல் தலைமைச்செயலர், முனைவர்.இரா.கண்ணன், இ.ஆ.ப., ஆணையர் முனைவர்.மா.வீரசண்முகமணி, இ.ஆ.ப.,** கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆணையர்
கூடுதல் தலைமைச்செயலர்
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**